DECEMBER 2024

www.balamandir.org

மலர்-1 இதழ்-9

MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

எஸ். கோவிந்த் சுவாமிநாதன் சட்டக் கல்வி தினம்

பால மந்தரின் முன்னாள் தலைவரும், உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான எஸ். கோவிந்த் சுவாமிநாதன் அவர்களின் நினைவாக சட்டக் கல்வி தினம் நவம்பர் மாதம் 09 தேதி அன்று, பால மந்திரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, இந்தியாவில் சட்டக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசினார். படிப்பில் கவனம் செலுத்தி கடினமாக உழைத்தால் யார் வேண்டுமானாலும் வெற்றிகரமான வழக்கறிஞராக ஆக முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். பின்னர், குழு விவாதம் நடைபெற்றது, இதில் பல முன்னணி வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

குழந்தைகள் தின கொண்டாட்டம்:





14/11/2024 அன்று, மறைந்த பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளை முன்னிட்டு பால மந்திர் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்காக பல வேடிக்கை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன, இது அனைத்துக குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியான நாளாக அமைந்தது.

சர்வதர்ம பிரார்த்தனை:







23/11/2024 அன்று பால மந்திரில் சர்வதர்ம பிரார்த்தனை நடைபெற்றது. சர்வதர்ம பிரார்த்தனை என்பது அனைத்து மதங்களின் உண்மையை உள்ளடக்கியது. அனைத்து மதங்களும் ஒரே தெய்வீக உண்மையை நோக்கித்தான் செல்லுகிறது என்பதை வலிவுறுத்துகிறது. அனைத்து மதங்களும் மதிக்கப்பட்டு, அனைத்து நம்பிக்கை பிரார்த்தனைகளும் செய்யப்பட்டது. குழந்தைகள் பிரார்த்தனையில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இது மதச்சார்பின்மை மற்றும் அனைத்து மதங்களையும் மதித்து நடக்க வேண்டும் என்ற கருத்தை குழந்தைகள் புரிந்துகொள்ள உதவியது.

உங்கள் சமூகப் பணியாளர்களைப் பற்றி அறிந்து கொள்வோம் :

செல்வி. வானதி சாமிநாதன், நாமக்கல் மாவட்டத்தை பூர்விகமாக இவர் வணிகவியல் இளங்கலை பட்டம் (B.com) மற்றும் பாலின ஆய்வில் முதுகலை பட்டம் (MA Gender studies) பெற்றுள்ளார். ஜனவரி மாதம் 2024 முதல் பால மந்திர் அறக்கட்டளையின் கின்ஷிப் கேர் திட்டத்தில் சமூகப் பணியாளராக இணைந்தார். நாமக்கல் மாவட்டத்தில் 53 குடும்பங்களை சேர்ந்த 91 குழந்தைகளை கவனித்து வருகிறார். பால மந்திரில் ஒரு பகுதியாக சேர்வதற்கு முன்பு சமூக தொடர்பான பல்வேறு ஆய்வுகளில் பணியாற்றி இருக்கிறார். இவர் சமூகப் பணியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.



"ஒரு குழந்தையின் சிறகுகள் விரியும் போதே, ஓர் சமூகத்தின் உயர்வு தொடங்குகிறது."



பால மந்திர் - கின்ஷிப் கேர்:

நவம்பர் 2024 நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் 831 குடும்பங்களைச்சேர்ந்த 1452 குழந்தைகள் கின்ஷிப் கேர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பால மந்திரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.

ஆரம்பகால குழந்தை வளர்ப்பு மற்றும் பெற்றோருக்குரிய வழிகாட்டல்கள்:

நம் அனைவரின் வாழ்க்கையிலும் பிறந்ததில் இருந்து 6 வயது வரை மிகவும் முக்கிய காலக்கட்டம் ஆகும். அவை ஒருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைக்கின்றது. இந்த ஆரம்ப கால முக்கியத்துவத்தை அறிந்து, கின்ஷிப் கேர் ஆரம்பகால பெற்றோருக்கான வழிகாட்டல்களை வழங்கி வருகிறது. ஒரு வாட்ஸ்அப் குழுவின் மூலம், குழந்தை வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் குழந்தை வளர்ப்பின் எளிய குறிப்புகள் குறித்த வீடியோக்கள் வாரந்தோறும் பகிரப்படுகின்றன. இதனை பெற்றோர்கள் கவனித்து தங்கள் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தி பயன் அடையலாம் மற்றும் உங்கள் சந்தேகங்களை எங்களிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

கே.சி நிகழ்ச்சி – கோவை







17/11/2024 அன்று கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் இணைந்து நடத்திய கின்ஷிப் கேர் நிகழ்ச்சி கோயம்புத்தூர் கலைஞர் கருணாநிதி தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது. இதில், 75 குடும்பங்களைச் சேர்ந்த 214 நபர்கள் பங்கேற்றனர். இந்த மாவட்டங்களுக்கான முதல் நிகழ்ச்சி என்பதால், திட்டத்தின் பயனாளிகள் பால மந்திரின் மற்ற உறுப்பினர்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். சிவாஞ்சலி மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர். புவனேஸ்வரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



இதில் குழந்தைகளுக்கு சரியான மற்றும் ஆரோக்கியமான உணவின் முக்கியத்துவம் குறித்து அவர் பேசினார். பால மந்திரைச் சேர்ந்த திரு.நடராஜன், திருமதி. விஜி ரமேஷ், திருமதி. விஜயலட்சுமி மற்றும் திருமதி. ராஜலட்சுமி ஆகியோர் குடும்பத்தினருடனும் குழந்தைகளுடனும் தனித்தனியாக கலந்துரையாடினர். பகிரப்பட்ட தகவல்கள் பெற்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன, மேலும் கின்ஷிப் கேர் மற்றும் பால மந்திர் பற்றிய தெளிவான புரிதல் அனைவருக்கும் கிடைத்தது.





மேலும் குழந்தைகளுக்காக பல்வேறு வேடிக்கை விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குழந்தைகள் அனைத்து விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். இம்முகாமானது பெற்றோர்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் நிகழ்வாகவும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை வழங்கும் விழாவாகவும் அமைந்தது

பெற்றோருக்கான பகுதி - PARENTS' CORNER



- குழந்தைகளின் வளர்ச்சிக்கு விளையாட்டு முக்கியமானது, ஆரோக்கியமான உணவு அவர்கள் விளையாடுவதற்கு தேவையான ஆற்றலை வழங்குகிறது.
- ஆரோக்கியமான உணவு என்பது விலை உயர்ந்த பொருட்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு மலிவாக கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பழங்களில் கூட வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நார்ச்சத்துகள் நிரம்பியுள்ளன.
- அவை குழந்தையின் வளர்ச்சி, நோயெதிர்ப்பு மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு உதவுகின்றன.
- அவர்களின் தினசரி உணவில் புரதம், தானியங்கள் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் குழந்தைகள் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். குழந்தைகள் சரியான நேரத்தில் உணவை எடுத்துக் கொள்ள வேண்டும்.

- பெற்றோர்கள் சத்தான உணவுகளை சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தில் முன்மாதிரியாக இருக்கலாம். ஆரோக்கியமற்ற மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை கட்டுப்படுத்த / தவிர்க்க வேண்டும். உங்கள் வீட்டு பெரியவர்களிடமிருந்து நீங்கள் தெரிந்துக்கொண்ட ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி உங்கள் குழந்தைக்கு கற்றுக் கொடுங்கள். முக்கியமாக உணவை வீணாக்கக்கூடாது என்று அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள்

"கல்வி கூடங்களுக்கு வரும் குழந்தைகள் பசியுடன் இருக்கக் கூடாது. அந்த பசி அறிவுக்கு தடையாகும்."

- கருமவீரர் காமராஜர்

YOUNG ACHIEVERS



புவனேஷ் (காஞ்சிபுரம்) எம்.பி. சி. தேர்வு.



தனுஷ், ஜெயஸ்ரீ (காஞ்சிபுரம்)



கீதா, ஸ்ரீ மோனிஷ் (காஞ்சிபுரம்) கராத்தே போட்டி



பிரக்யா (வேலூர்) ஆங்கில கையெழுத்துப் போட்டி.



தர்ஷன் (நாமக்கல்)மரத்தான் 15 நிமிடத்தில் 5 கிலோமீட்டர் வந்துள்ளார்.



டிம்பிள்ஹாசினி (திருவள்ளூர்) பள்ளிகளுக்கு இடையிலான போட்டி



வி.தரணிஷ் (சேலம்) சிலம்பம் நோபல் உலக சாதனை படைத்துள்ளார்.



ரத்தீஷ் (நாமக்கல்) வினாடி வினா போட்டி.

மேலும் பல நிகழ்ச்சிகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!